சர்க்கரைக் கிழங்கு

சர்க்கரைக் கிழங்கு என்றால் என்ன ?

- இது ஒரு குளிர்பிரதேச பயிராக இருந்தாலும் தமிழ்நாடு போன்ற வெப்ப பகுதியிலும் பயிரிட ஏதுவானது
- 12 முதல் 15 விழுக்காடு வரை சக்கரைச் சத்து உள்ளது
- 5 முதல் 6 மாதக் கிழங்குப் பயிர்
- உலகளவில் உற்பத்தி செய்யப்படும் சக்கரையில் 45 விழுக்காடு இப்பயிரிலிருந்து பெறப்படுகின்றது

சர்க்கரைக் கிழங்கின் பயன்கள் என்ன ?

- சக்கரை உற்பத்திக்கு பயன்படுகிறது
- எரிசக்திக்கு பயன்படும் எத்தனால் எடுக்க மூலப் பொருளாக பயன்படுகின்றது
- சர்க்கரைக் கிழங்கின் கழிவுப் பொருட்களான இலைகளையும் மற்றும் கிழங்குக் கூழையும், மாட்டுத் தீவனமாக உபயோகிக்கலாம்

சர்க்கரைக் கிழங்கின் முக்கியத்துவம் யாது?

- எரிசக்தியின் தேவை அதிகரித்த இன்றைய நிலையில் இக்கிழங்கிலிருந்து கிடைக்கும் எத்தனால் மூலம் சுமார் ரூ.12 ஆயிரம் கோடி அளவிற்கு அன்னிய செலவாணி மீதப்படுத்தலாம.
- எத்தனாலுக்கு எப்போதும் தேவை இருப்பதால் சக்கரை ஆலைக்கு தொடர்ந்து மூலப் பொருட்கள் கிடைத்து ஆலைகள் தொடர்ந்து செயல்பட வாய்ப்புள்ளது
- இதற்கு நீர்த்தேவை குறைவு

தமிழ்நாட்டில் எங்கு சர்க்கரைக் கிழங்கு பயிரிடலாம் ?

இப்பயிர் சமவெப்ப சீதோஷ்ண நிலை உள்ள தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சாகுபடி செய்யலாம்.

சர்க்கரைக் கிழங்கு சாகுபடிக்கு ஏற்ற ரகங்கள் யாவை ?

வெப்பமண்டல பகுதிகளுக்கு ஏற்ற ரகங்கள் பசோடா, ஹெச்.ஐ 0064 மற்றும் டோராடி.

சர்க்கரைக் கிழங்கு விதைகளை எங்கு வாங்கலாம் ?

- தற்பொழுது சர்க்கரைக் கிழங்கு விதைகள் நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதில்லை.
- வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து சில விதை நிறுவனங்கள், விதைகள் கிடைக்க ஏற்பாடு செய்கின்றன.

சர்க்கரைக் கிழங்கு சாகுபடிக்கேற்ற பருவங்கள் யாவை ?

புரட்டாசி - ஐப்பசி பட்டம் (குளிர் காலம்)

சர்க்கரைக் கிழங்கு சாகுபடிக்கேற்ற மண் வகைகள் யாவை ?

- நல்ல வடிகால் வசதியுள்ள நீர் தேங்காத இருமண்பாடு உள்ள மண் வகைகள் மிகவும் ஏற்றது.
- 6.5 முதல் 8.5 கார அமிலத் தன்மை நிலை உள்ள மண் வகைகள் மிகவும் ஏற்றது.
- களர் மற்றும் உவர் நிலங்களிலும் சாகுபடி செய்யலாம்

ஒரு ஏக்கருக்கு தேவையான விதையளவு என்ன ?

- ஏக்கருக்கு **40000** "டிசைனர்" விதைகள் தேவை
- 20000 விதைகள் (600 கிராம்) கொண்ட **2 பைகள்** தேவைப்படும்

விதைகளை எவ்வாறு விதைக்க வேண்டும் ?

பாருக்குப்பார் 50 செ.மீ இடைவெளியில் விதைக்கு விதை 20 செ.மீ. இடைவெளி விட்டு குழிக்கு ஒரு விதை வீதம் 2 செ.மீ. ஆழத்தில் விதைகளை ஊன்ற வேண்டும்.

சர்க்கரைக் கிழங்கிற்கு உர மேலாண்மை எவ்வாறு செய்ய வேண்டும் ?

மண்பரிசோதனை செய்து உரமிடல் வேண்டும். மண்பரிசோதனை செய்ய வாய்ப்பு இல்லாத நிலையில் கீழ்க்கண்டவாறு உரமிடல் வேண்டும்.

அடியுரம் (ஏக்கருக்கு)

1. தொழுஉரம் - 10,000 கிலோ
2. தழைச்சத்து - 30 கிலோ
3. மணிச்சத்து - 24 கிலோ
4. சாம்பல் சத்து - 24 கிலோ
5. உயிர் உரங்கள்
   - அஸோஸ் பைரில்லம் 10 பாக்கெட்டுகள் (2 கிலோ)
   - பாஸ்போ பாக்டீரியா 10 பாக்கெட்டுகள் (2 கிலோ)

- **மேலுரம் - தழைச்சத்து**

முதல் மேலுரம் - 15 கிலோ விதைத்த 30 வது நாளில்

இரண்டாம் மேலுரம் - 15 கிலோ விதைத்த 60 வது நாளில்

சர்க்கரைக் கிழங்கிற்கேற்ற களை நிர்வாகம் செய்வது எப்படி ?

- பென்டிமெத்தலின் (1.5 லிட்டர் ஸ்டோம்ப்) களைக்கொல்லியினை 300 லிட்டர் நீரில் கலந்து விதைத்த 3-வது நாளில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவேண்டும்
- விதைத்த 25 வது நாளிலும், 50 வது நாளிலும் கைக்களை எடுத்து மண் அணைக்க வேண்டும்.

சர்க்கரைக் கிழங்கிற்கேற்ற நீர் நிர்வாகம் செய்வது எப்படி ?

- களிமண் கலந்த மண் வகைகளுக்கு 8 - 10 நாட்களுக்கு ஒருமுறையும், வண்டல் மண் சார்ந்த மண் வகைகளுக்கு 5 - 7 நாட்களுக்கு ஒரு முறையும் நீர்ப்பாசனம் செய்யவேண்டும்.
- விதைகள் விதைக்கும் முன்பு மண்ணில் போதுமான ஈரம் இருத்தல் அவசியம். எனவே விதைக்குமுன் மண்ணின் தன்மைக்கு ஏற்ப நீர் கட்டி போதுமான ஈரத்தை மண்ணில் நிலைப்படுத்த வேண்டும்.
- நீர் தேங்கும் இடத்தில் பயிர் வளர்ச்சி குறைவதால் மண்ணின் தன்மைக்கேற்ப நீர்ப்பாசனம் அவசியம்.
- கிழங்கு அறுவடைக்கு 2-3 வாரத்திற்கு முன்பு நீர்ப்பாசனம் செய்வதை நிறுத்த வேண்டும்.
- கிழங்கை எளிதாக மண்ணிலிருந்து அறுவடை செய்வதற்கு ஏதுவாக, அறுவடைக்கு சற்று முன்பாக நீர்ப்பாசனம் செய்யவேண்டும்.

சர்க்கரைக் கிழங்கை தாக்கும் நோய்கள் மற்றும் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் ?

- இலைப்புள்ளி நோய், அடிச்சாம்பல் நோய், பூசாரியம் மஞ்சள் இலை நோய் மற்றம் செடி அழுகல் நோய்.
- நோய்களை கட்டுப்படுத்த ஊடுருவிய பூஞ்சாள நோய் தடுப்பு மருந்துகளை இரண்டு முறைகள் 3 வது மற்றும் 5 வது வாரத்தில் தெளிக்க வேண்டும்.
- புளுகாப்பர் அல்லது ரிடோமில் எம் என்சட் 72, 2.5 - 3 கிராம் , லிட்டர் என்ற அளவில் தண்ணீரில் கலந்து செடியை சுற்றியுள்ள வேர் மற்றும் மண்கண்டத்தை நனைக்கவேண்டும்.

சர்க்கரைக் கிழங்கை தாக்கும் பூச்சிகள் மற்றும் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் ?

- வெட்டுப்புழு, வெள்ளைப்புழு, படைப்புழு மற்றும் அசுவுணி
- ஊடுருவும் பூச்சிக் கொல்லி மருந்துகளை தேவைக்கு ஏற்ப தெளித்து பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்

சர்க்கரைக் கிழங்கை எப்போது அறுவடை செய்யலாம்

- சர்க்கரைக் கிழங்கு ரகத்தின் சராசரி வயது 5 முதல் 6 மாதம்
- முதிர்ந்த செடியின் அடியில் உள்ள வெளி அடுக்கு கீழ் இலைகள் வெளிறிய மஞ்சள் நிறமடையும் போது அறுவடை செய்யலாம்
- "சர்க்கரை மானி" (பிரிக்ஸ் மீட்டர்) மூலம் சர்க்கரைச் சத்து 15 – 18 விழுக்காடு வந்தவுடனும் கிழங்குகளை அறுவடை செய்யலாம்